DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. - 151/2024

Prosecution PW - 25

| | | | |
|---|---|---|---|
| Name | டாக்டர் செந்தில்குமார் | Occupation | |
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 04.03.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 to A10 Present.

<u>முதல் விசாரணை</u>

நான் தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவ அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.04.2024 தேதி மாலை 6.15 மணியளவில் ஜெயகுமார் என்ற 50 வயதுடைய ஆண் நபரை அவருடைய உறவினர் ராஜகுமாரி என்பவர் கொண்டு வந்தார். அவரை விசாரித்தபோது 01.04.2024 அன்று மாலை 5 மணியளவில் மேற்கூரிய நபருடன் ராஜகுமாரியும் சேர்ந்து பசுபதிகோவில் மெயின்ரோட்டில் செல்லும்போது அடையாளம் தெரிந்த 10 ஆண் நபர்கள் தன்னையும், இறந்தவரையும் கட்டையால் தாக்கியதாக உடன் வந்த ராஜகுமாரி கூறினார். நான் மேற்படி நோயாளியை பரிசோதித்தபோது உணர்வற்ற அசைவற்ற நிலையில் இருந்தார். மூச்சு காற்று மற்றும் இருதய துடிப்பு நின்று போய் இருந்தது. நாடிதுடிப்பு, இரத்ததில் ஆக்சிஜன் அளவு மற்றும் நாடிதுடிப்பு, இரத்த அழுத்தம் அளவிடமுடியாத நிலையில்இருந்தது. விழி சுருங்கி விரியும் தன்மை அற்று முழுவதும் விரிவடைந்திருந்தது. ஈசிஜி பரிசோதனையில் இருதய துடிப்பு இருப்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை. அதனால் அவரை இறந்ததாக அறிவித்து பிணவறைக்கு அவரது உடலை எடுத்து செல்ல அனுமதித்தேன் மேற்படி நபருக்கு நான் வழங்கிய விபத்து பதிவேடு அதசாஆ **18.**

அதே தினம் மாலை 6.15 மணிக்கு பிரவீன் குமார் என்ற 35 வயதுடைய ஆண் நபரை அவருடைய நண்பர் சரவணகுமார் என்பவர் சிகிச்சைக்கு அழைத்த வந்தார். மேற்படி நபரை விசாரிக்கும்போது அவர் 01.04.2024ம் தேதி மாலை 4 மணியளவில் பசுபதிகோவில்அருகே தெரியாத ஆண் நபர்களால் கம்பியால்தலையிலும், முகத்திலும் தாக்கப்பட்டதாக உடன் வந்தவர் கூறினார். மேற்படி நபரை நான் பரிசோதனை செய்தபோது சுயநினைவுடன் காணப்பட்டார். அவருக்கு கீழ் கண்ட காயங்கள் காணப்பட்டன

1. கிழிந்த காயம் 5X4X தோல் அளவு ஆழத்தில் இடது பக்கவாட்டு மண்டையில் காணப்பட்டது.
2. மேல்தாடையில் முன்பற்கள் உடைந்திருந்தது.
3. மேல்உதட்டில் 3X2 செ.மீ அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

4, இடது பக்க தொடையில் 2X2 செ.மீ அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது
மேற்படி நபருக்கு நான் வழங்கிய விபத்து பதிவேடு அதசாஆ **19**.

அதே தினம் மாலை 6.48 மணியளவில் செந்தில்குமார் என்ற 46 வயதுடைய ஆண் நபரை சிகிச்சைக்காக அவருடைய சகோதரி சுமலதா என்பவர் அழைத்து வந்தார். மேற்படி நபரை நான் விசாரித்தபோது 01.04.2024ம் தேதி மாலை 4 மணியளவில்பசுபதிகோவில்அருகே நான்கு சக்கர வாகனத்தல் சென்றபோது வண்டியை நிறுத்தி தெரிந்த 10 ஆண் நபர்களால் கட்டையாலும், கல்லாலும், தாக்கப்பட்டதாக உடன் வந்தவர் கூறினார். மேற்படி நபரை நான் பரிசோதித்த போது சுயநினைவுடன் காணப்பட்டார் அவருக்குகீழ கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. வலது ஆள்காட்டு விரலில் 1X1 செ.மீ அளவில்சிராய்ப்பு காயம் காணப்பட்டது
2, வலது மேல் கையில் 1X1 செ.மீ அளவில் பலதரப்பட்டசிராய்ப்பு காயம் காணப்பட்டது
3. வலது முழங்கையில்பின் பக்கத்தில் 1X1 செ.மீ அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது
4. வலது பக்க முகத்தில் வீக்கமும் தொடு வலியும் இருப்பதாக கூறினார். மேற்படி நபரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். மேற்படி நபருக்கு நான் வழங்கிய விபத்து பதிவேடு அதசாஆ **20**.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>

ஜெயகுமாரின் விபத்து பதிவேட்டில் மாலை 5 மணிக்கு காயம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது உள்ளது என்றால் சரிதான். மேற்படி மூவருக்கு ஏற்பட்ட காயம் கார் விபத்தில் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

ஒம்/ஜி.சுந்தரராஜன்

அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. - 151/2024

Prosecution PW - 26

| | | | |
|---|---|---|---|
| Name | சுரேஷ் | Occupation | |
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 04.03.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 to A10 Present.

முதல் விசாரணை

நான் பாபநாசம், பண்டாரவடையில் கார்டாக்டர் ஆட்டோ மொபைல் ஷாப் வைத்துள்ளேன். 25.05.2024ம்தேதி மதியம் 12 மணியளவில் நிசான் சன்னி பதிவு எண் TN 36 AZ 0660 என்ற காரின் கண்ணாடி உடைக்கப்பட்டு இருந்தது. அதன் சேதம் மதிப்பு குறித்து சான்று வழங்குமாறு ஆய்வாளர் கேட்டு கொண்டதன் பேரில் நான் வாகனத்தை பார்வையிட்டு காரின் அனைத்து கண்ணாடிகசளும் உடைக்கப்பட்டிருந்ததால் அதன் சேத மதிப்பு ரூ. 27000 என்று சான்று வழங்கினேன். அந்த சான்று தான் என்னிடம் காட்டப்படுவது. அதன் சேத மதிப்பு அதசாஆ **21**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

நான் வழங்கிய சேத மதிப்பின் சான்றில் தேதி குறிப்பிடவில்லை என்றால்சரிதான். அந்த சான்று யாருக்கு வழங்கபட்டது என்ற குறிப்பும் இல்லை என்றால் சரிதான். நான் வழங்கிய சேத மதிப்பு சான்றில் முத்திரையிட்டு வழங்கவில்லை என்றால் சரிதான்.

ஒம்/ஜி.சுந்தரராஜன்

அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்